# அழகான ஆறுகளும் அருவிகளும்

பாடம் 1

ஆறு : மிகப் பெரிய இடத்தை நான் மூடியுள்ளேன். நான் கொண்டு செல்லும் நீரைப் பாருங்கள். நான் தினமும் எத்தனை வயல்களை செழிப்பாக்குகின்றேன். என்னால் தினமும் எத்தனை மனிதர் பயன் பெறுகின்றனர். எனது அழகைப் பாருங்கள். என்னை எல்லோரும் வர்ணிக்கின்றார்கள்.. என்னால் கிடைக்கும் பயன் எத்தகையது?

அருவி : நான் ஆறுகளை விட சிறியவன் என்பது உண்மையே! என்றாலும் எனது அழகை தோற்கடிக்க எவராலும் முடியாது. தாமரை பூக்கள் பூத்து, சிறு மீன்கள் மேலும் கீழும் பாய்ந்து, தவளைகள் பாய்ந்து பாய்ந்து செல்லும் போது நான் அடையும் மகிழ்ச்சி எவ்வளவு தெரியுமா? ஆவைகள் என்னை மேலும் மேலும் அழகுபடுத்துக்கின்றன. நான் பெறுமதி வாய்ந்தவன் அல்லவா?

ஓடைகள் : மென்மையான கற்களின் மேலாக சிறு அளவிலான நீர் ஓடுகின்றது. நான் முழுக் கிராமத்திற்கும் குளிர்மையைக் கொடுக்கின்றேன். அதே போல முழுக் கிராமத்திற்கும் அழகைக் கொடுக்கின்றேன். என்னை விட அழகானவர் யார்?

நயனா : ஆறுகளும், அருவிகளும், ஓடைகளும் கதைத்துக் கொண்டிருப்பதை சிறிய சிநேகிதியான நயனா கேட்டுக் கொண்டு இருந்தாள்.

ஆறுகளும், அருவிகளும், ஓடைகளும் கதைத்துக் கொண்டிருந்தமையை நான் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

நண்பர்களே! நீங்கள் எவ்வாறு இவ் உலகத்துக்கு வந்தீர்கள் என உங்களுக்குத் தெரியுமா?

நல்லது நான் உங்களுக்கு சொல்லித் தருகின்றேன். கடவுள் இவ் உலகைப் படைக்கும்போது உங்கள் அனைவரையும் விசேட இலட்சணங்களுடன் படைத்தார். ஆதனால் தான் நீங்கள் அனைவரும் அழகானவர்களாக இருக்கின்றீர்கள். நீங்கள் அனைவருமே எங்களுக்கு பிரயோஜனமானவர்களே!

அதற்காக கடவுளுக்கு துதி செலுத்துங்கள்.
ஆறுகள்! அருவிகள்! ஓடைகள்! கடவுளுக்கு துதி உண்டாவதாக!



செயற்பாடு :

1. ஆறுகள், அருவிகள், ஓடைகள் என்பனவற்றுக்காக நன்றி செலுத்தும் ஜெபம் ஒன்று எழுதுங்கள்.
2. இலங்கையின் ஆறுகள் 5 இன் பெயர்களைக் குறிப்பிடுக.